<u>தொழிலாளர் நீதிமன்றம். காஞ்சிபுரம்</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **ID.No.** | **:** | 70/2024 | சாட்சியம் | **:** | **WW1** |
| **Name** | **:** | திரு.தளபதி | | | |
| **Date** | **:** | **20.08.2025** | | | |
| **Time** | **:** | **12.03 p.m to 12.25 p.m** | | | |

<u>தொ.த.சா.**1.**திரு.தளபதி என்பவர் இன்று ஆஜர் செய்யப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார். குறுக்கு விசாரணை</u>

நான் எதிர்மனுதாரர் நிர்வாகத்தில் நடத்துனராக வேலை பார்த்து வந்தேன். வழக்கின் முழு விவரம் தெரியுமா என்றால் ஓரளவு தெரியும். அருண் சிங் என்பவரை தெரியுமா என்றால் எங்கள் தொழிற்சங்கத்தின் உறுப்பினர் ஆவார். அவர் எங்கள் சங்கத்தின் உறுப்பினர் என காட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. எங்கள் சங்கத்தின் பெயர் நேதாஜி டிரான்ஸ்போர்ட் வொர்க்கர்ஸ் யூனியன் ஆகும். எங்கள் தொழிற்சங்கத்தில் வருடா வருடம் படிவம்-E தாக்கல் செய்யப்பட்டு வருகிறது. அருண் சிங்கை எத்தனை வருடமாக தெரியும் என்றால் சங்கத்தில் உறுப்பினராக ஆன தேதியில் இருந்து தெரியும் எப்போது உறுப்பினர் ஆனார் என்றால் 2020 ல் உறுப்பினர் ஆனார் அப்போது இருந்து தெரியும். அருண் சிங் எந்த தடத்தில் பேருந்தை இயக்கி வந்தார் என்ற விவரம் தெரியாது. படிவம்-E தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. அருண் சிங் எதிர்மனுதாரர் நிர்வாகத்தில் 2009 ஆம் ஆண்டு பணிக்கு சேர்த்தார். தொ.சா.ஆ.**5** முன்னிலைக்கு 06.05.2013 தேதியிட்ட பணி நிரந்தர உத்தரவு என்றால் அது தவறானது என சொல்லி

தான் வழக்கு போடப்பட்டுள்ளது. தொ.சா.ஆ.4 முன்னிலைக்கு அருண் சிங் தின கூலியாக பணி அமர்த்தபட்டாரா என்றால் ஆமாம். அருண் சிங் தற்காலிக ஊழியர் என உத்தரவு வழங்கப்பட்டது என்றால் அவர் பணியில் சேர்ந்த தேதியில் இருந்தே தற்காலிக ஊழியராக தான் அமர்த்தபட்டார். தொ.சா.ஆ.5 முன்னிலைக்கு அருண் சிங்கிற்கு வழங்கப்பட்ட உத்தரவை எதிர்த்து ஆட்சேபனை எதுவும் எழுத்து மூலமாக தெரிவிக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. அருண் சிங் தொடர்ந்து 240 நாட்கள் வேலை பார்த்தார் என காட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. அருண் சிங் அவருக்கு தாமதமாக பணி நிரந்தர உத்தரவு வழங்கப்பட்டது என தெரிவித்து நிர்வாகத்திற்கு மனு எதுவும் கொடுத்து உள்ளாரா என்றால் இல்லை. பணி நிரந்தர உத்தரவு வழங்க கேட்டு அருண் சிங் அது சம்பந்தப்பட்ட அதிகாரிகளை சந்தித்து மனு எதுவும் கொடுத்தாரா என்றால் இல்லை. நிலையாணையில் பணி நிரந்தரம் செய்யப்பட வேண்டும் என கண்டிருக்கும் பட்சத்தில் அதிகாரிகளை சந்தித்து மனு கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை கிளை மேலாளர் தான் அதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். 06.05.2013 தேதியிட்ட உத்தரவு வழங்கி 9 ஆண்டுகள் கழித்து பின் சிந்தனையுடன் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருக்கும் காரணத்தினால் நிலைக்கதக்கது அல்ல என்றால் தவறு. வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் தவறு.

S SUJATHA

Presiding Officer, Labour Court
Digitally signed by S SUJATHA
Location: Kancheepuram
Date: 2025.08.20 17:20:18 +0530

Presiding Officer,
Labour Court, Kancheepuram.
Dated:20.08.2025.